TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040887

1. District மாவட்டம் : செங்கல்பட்டு  PS: காவல்நிலையம் VSAC செங்கல்பட்டு  Year ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண் 02  Date நாள் 07.06.2024

2. (i) Act சட்டம்: CrPC  Sections பிரிவுகள்: 102 CrPC

(ii) Act சட்டம்: PC Act Amendment 2018  Sections பிரிவுகள்: 7, 7A

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 06.06.24  Date to : நாள் வரை 07.06.24

Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 16.10 Hrs  Time to : நேரம் வரை 01.30 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.06.24 / 07/06/24  Time : நேரம் 03.30 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.06.24 / 07/06/24  Time : நேரம் 03.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  26 KM தெற்கு

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. ஜெய்அலி  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. அப்துல் ரஹ்மான்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23.01.1979  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் துணை வட்டாட்சியர் தேர்தல் பொறுப்பு DIO  (g) Address : முகவரி துணை வட்டாட்சியர், தேர்தல், திருக்கழுகுன்றம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) M.M.T. திலீப் பிரசாத் வ41 த/பெ. M. தன்ராஜ், உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம்
2) சீனா வ32 த/பெ தேவ் திவாகரன், No: 9/526 தெரு, புக்கத்துறை மதுராந்தகம் 3) அருணா வ40 த/பெ K. குமாரசாமி No: 9 ... 936,

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்  நேரடியாக புகார் தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

RS. 1,53,980/-

10. Total value of properties stolen / involved :
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு RS. 1,53,980/-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் இல்லை

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

\ தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது \

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07/06/2024 /04.00Hrs

Name பெயர் S. [illegible]
Rank நிலை DSP ........ No. எண் V&AC,

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)p.2

**FIR வரிசை எண் 12-ன் தொடர்ச்சி**

இன்று 07.06.2024 03.30 மணிக்கு நிலையம் ஆஜராகி திரு.A.சையத்அலி த/பெ.A.அப்துல் ரகுமான் (லேட்), துணை வட்டாட்சியர் (தேர்தல்), திருக்கழுகுன்றம், மாவட்ட ஆய்வு குழு அலுவலர் பொறுப்பு செங்கல்பட்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் வருமாறு.

அனுப்புநர், A.சையத்அலி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம் (பொறுப்பு) துணை வட்டாட்சியர் (தேர்தல்) திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு மாவட்டம். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, செங்கல்பட்டு. ந.க.எண்:- 115/அ/2024, நாள்:- 07.06.2024. அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், செங்கற்பட்டு மாவட்டம், துணை வட்டாட்சியர் (தேர்தல்) பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் உடன் - மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் - 06.06.2024 அன்று திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. பார்வை: செயல்முறைகள், ந.க.எண்:- 115/அ/2024. நாள் 06.06.2024. செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில், நிலம் சம்மந்தமான ஆவணங்களை பதிவு செய்ய வரும் பொது மக்களிடமிருந்தும் மற்றும் ஆவண எழுத்தர்களிடமிருந்தும் லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், கடந்த 06.06.2024 மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் என்னுடன், செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.சரவணன் மற்றும் காவல் அலுவலர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வினை மாலை சுமார் 04.10 மணி முதல் இரவு சுமார் 01.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது மதுராந்தகம் சார்பதிவாளரின் அறையின் அருகில் உள்ள ஆவண பதிவறையில் உள்ள ஜன்னல் சுவரில் ரூ.20,000/-ம், Camera Operator திருமதி.வாணிஸ்ரீ என்பவரிடமிருந்து ரூ.2480/-ம், சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் திரு.ஜெயகுமார் என்பவர் அவரது உதவிக்கு வைத்திருந்த தனி நபர் திருமதி.யசோதா என்பவரிடமிருந்து ரூ.1500/-ம் கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த தனி நபர்களான 1) திருமதி.சரளா, க/பெ.தியாகராஜன் (லேட்) என்பவரிடமிருந்து ரொக்கமாக ரூ.80,000/-, 2) திரு.அருளொளி த/பெ.குமாரசாமி என்பவரிடமிருந்து ரொக்கமாக ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. ஆகமொத்தம் ரூபாய் 1,53,980/- கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை ஆணை என்னால் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பணம் சார்பதிவாளர் மற்றும் அவரது

அலுவலர்களால் அன்றைய தினம் நடைபெற்ற பத்திர பதிவில் செயல்முறை ஆணையில் குறிப்பிட்டவாறு பெறப்பட்ட மற்றும் பெறவிருந்த கையூட்டு பணமாகையால் அவற்றை கைப்பற்றினேன். மேற்கண்ட தொகை ரூ.1,53,980/- மற்றும் இதர ஆவணங்களையும் செயல்முறை ஆணையையும் இத்துடன் இணைத்து தக்க நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஓம் (A.சையத்அலி.) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், செங்கற்பட்டு மாவட்டம் (பொறுப்பு) துணை வட்டாட்சியர் (தேர்தல்) திருக்கழுகுன்றம் செங்கல்பட்டு மாவட்டம். இணைப்பு - 1) செயல்முறைகள் ந.க.எண்:- 115/அ/2024, நாள் 06.06.2024 (அசல்) 2) ரொக்கப்பணம் ரூ.1,53,980/- 3) மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் தனி அறிக்கை- 6 நபர்கள் 1) திரு.M.M.T.திலீப்பிரசாத் (சார்பதிவாளர் பொறுப்பு) 2) திரு.சதீஷ் 3) திருமதி.வாணிஸ்ரீ, 4) திரு.சிவக்குமார் 5) திருமதி.யசோதா, 6) திரு.ஜெகதீசன் 4). தனிநபர்களின் வாக்குமூலங்கள் - 1) திருமதி.சரளா 2) திரு.அருளொளி 3) திரு.சக்திவேல் 4)திரு.தியாகராஜன். 5) திரு.ராமகிருஷ்ணன் 6) திரு.ரவிக்குமார், 7) திரு.சுரேஷ் 8) திரு.கேசவன் 9) திரு.ஸ்டீபன் 10) திரு.நடராஜன் 11)திரு.பண்டரிபாய் 12) திரு.ஏழுமலை 13)திரு.சுந்தரபாபு, 14) திரு.செந்தில்குமார் 15)திருமதி.கவிதா 16)திரு.அனிஷ் 17)திரு.விஜய் மற்றும் 18)திரு.ஜெயகுமார். 5). 06.06.2024-ந்தேதி காலையிலிருந்து 29 ஆவணங்கள் பதியப்பட்டுள்ளது. இது சம்மந்தப்பட்ட விவரத்தின் கணிணி நகல் பக்கம் 2-ல் சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல். 6). வருகைப்பதிவேடு-ஜீன்-2024 சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல் 7) தாமத வருகைப்பதிவேடு-ஜீன்-2024 சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல் 8) ரொக்கப்பதிவேடு-ஜீன்-2024 சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல் 9) தற்செயல் விடுப்பு பதிவேடு-ஜீன்-2024 சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல் 10) இயக்கப்பதிவேடு- -ஜீன்-2024 சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல். 11) தன் பதிவேடு- -ஜீன்-2024 சார் பதிவாளரின் சான்றொப்பமிட்ட நகல். 12) அசல் ஆவணம் எண்.472/2017 நாள்.03.02.2017, சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம். (திரு.உமாசங்கர்) 13) சுத்தவிக்கிரைய பத்திரம் மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலக முன்பதிவு வரிசை எண்.9(D409) தற்காலிக எண்.TP183522251/2024, date.06.06.2024 (திருமதி.சரளா) காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு (பொறுப்பு) மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் திருமதி.சத்யா அவர்களால் நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.அ.சையத்அலி அவர்களின் செயல்முறைகள். முன்னிலை-அ.சையத்அலி:- 115/அ/2024. நாள்:- 06.06.2024 பொருள்:- திடீர் இருதுறை கூட்டாய்வு - காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு (பொறுப்பு) மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் திருமதி.சத்யா அவர்களால்

நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.அ.சையத்அலி மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு செங்கல்பட்டு அவர்களால் - மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகம் - 06.06.2024 திடீர் இருதுறை கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. ஆணை செங்கல்பட்டு மாவட்டம். மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில், நிலம் சம்மந்தமான ஆவணங்களை பதிவு செய்ய வரும் பொது மக்களிடமிருந்தும் மற்றும் ஆவண எழுத்தர்களிடமிருந்தும் லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து. செங்கல்பட்டு மாவட்டம். மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று 06.06.2024-ம் தேதி மாலை சுமார் 04.10 மணி முதல் இரவு சுமார் 01.30 மணி வரை (07.06.2024) மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் வருமாறு.

இன்று 06.06.2024-ந்தேதி மாலை சுமார் 04.10 மணியளவில் இரு துறை கூட்டு தணிக்கையாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அவரிடம் நான். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் திருமதி.சத்யா அவர்களால் நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.அ.சையத்அலி என்று அறிமுகம் செய்துகொண்டு. என்னுடன் உதவிக்கு வந்த செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.சரவணன் அவர்களையும் மற்ற காவல் ஆளிநர்களையும் அறிமுகப்படுத்தி வைத்து. அனைவரது அடையாள அட்டையை காண்பித்தும். அவரவர்களை அவர் முன்பு சுயபரிசோதனை செய்தும் காண்பிக்கப்பட்டது. என்னுடன். வந்த காவல் ஆளிநர்களில். காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.சரவணன். காவல் ஆய்வாளர் திரு.S.பண்டாரசுவாமி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கதிர்வேல், தலைமைக்காவலர்கள் திரு.மோகன், (த.கா.1770), திருமதி. பூங்கொடி, (பெ.த.கா.1381), திருமதி.பரமேஸ்வரி, (பெ.த.கா.660) மற்றும் திரு.தினேஷ் வினோ (த.கா.663) ஆகியோர்கள் உதவிக்கு வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்தினேன். பின்னர் அலுவலகத்தில் கீழ் குறிப்பிட்ட அலுவலர்கள் ஆஜரில் இருந்தனர் அவர்களின் விவரம் வருமாறு.

| வ. எண். | ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள் | வைத்திருந்த இருப்புத்தொகை | கையிருப்பு பதிவேட்டின் விவரம் | விவரம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.M.M.T.தினேஷ் பிரசாத், வ-41, த/பெ. M.தன்ராஜ், உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), சார் பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | ரூ.100/- | ரூ.500/- | இவர் இன்று அலுவலகத்திற்கு வரும்போது ரூ.500/- எடுத்து வந்ததாகவும் மதிய உணவு மற்றும் இதர செலவுகள் போக மீதி ரூ.100/- உள்ளதாக கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஒப்படைக்கப்பட்டது. |
| 2. | திரு.B. சதீஷ், வ/30, த/பெ.பாபு, Data Entry Operator (TCS), சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | ரூ.100/- | - | இவர் இன்று அலுவலகத்திற்கு வரும்போது கையிருப்பு பதிவேட்டில் ஏதும் பதிவு செய்யவில்லை. அவரிடம் இருந்த ரூ.100/- போக்குவரத்து செலவிற்காக வைத்திருப்பதாக விளக்கம் அளித்தார். அந்த பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |
| 3. | திருமதி.வாணிஸ்ரீ வ/45 க/பெ.அமரேசன், Camera Operator (Zigma) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | ரூ.1000/- | - | இவர் இன்று அலுவலகத்திற்கு வரும்போது கையிருப்பு பதிவேட்டில் ஏதும் பதிவு செய்யவில்லை. தனது பையில் வைத்திருந்த பணம் ரூ.1000/-க்கு சரியான விளக்கம் கூறாததால் அவரிடமிருந்த பணம் ரூ.1000/- கைப்பற்றப்பட்டது. |
| 4. | திரு. V. சிவகுமார், வ/42 த/பெ.விஜயன், Data Entry Operator (TCS) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | ரூ.100/- | ரூ.- | இவர் இன்று அலுவலகத்திற்கு வரும்போது கையிருப்பு பதிவேட்டில் ஏதும் பதிவு செய்யவில்லை. அவரிடம் இருந்த ரூ.100/- போக்குவரத்து செலவிற்காக வைத்திருப்பதாக விளக்கம் அளித்தார். அந்த பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |
| 5. | திருமதி.யசோதா வ/34 க/பெ.லட்சுமணன், தனி நபர் (Private Individual) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | ரூ.1500/- | - | இவர் இவ்வலுவலகத்தில் பணியாற்றும் இளநிலை உதவியாளர் திரு.ஜெயகுமார் என்பவர் அவருக்கு உதவியாக பணிக்கு அமர்த்தியுள்ளதாகவும், மேலும், கடந்த ஐந்து மாத காலமாக வில்லங்க சான்று மனு ரெக்கார்டுகளை சரிபார்த்து கொடுக்கிறேன் என்றும், மேற்படி சம்பளமாக பொது மக்களிடமிருந்து ரூ.50, மற்றும் ரூ.20 பெற்றுக் கொள்வேன் என்றும் கூறினார். சோதனையின்போது அவர் வைத்திருந்த பணம் ரூ.1500/-க்கு சரியான விளக்கம் அளிக்காததால் திருமதி.யசோதாவிடமிருந்து பணம் கைப்பற்றப்பட்டது. |
| 6. | திரு.R.ஜெகதீஷன், வயது-37, த/பெ.ராகவன், தனி நபர் (Private Individual) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | ரூ.130/- | - | இவர் இவ்வலுவலகத்தில் பணியாற்றும் இளநிலை உதவியாளர் திரு.ஜெயகுமார் என்பவர் அவருக்கு உதவியாக பணிக்கு அமர்த்தியுள்ளதாகவும், மேலும், கடந்த ஆறு மாத காலமாக வில்லங்க சான்று மனு ரெக்கார்டுகளை சரிபார்த்து கொடுக்கிறேன் என்றும், மேற்படி சம்பளமாக பொது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மக்களிடமிருந்து ரூ.50, மற்றும் ரூ.20 பெற்றுக் கொள்வேன் என்றும் கூறினார். அவரிடம் இருந்த பணம் ரூ-130/- போக்குவரத்து செலவிற்காக வைத்திருப்பதாக விளக்கம் அளித்தார். அந்த பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |

மேலும் திருமதி.வாணிஸ்ரீ Camera Operator அறையானது சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரில் அமைந்துள்ளது. இந்த அறையை சோதனையிட்டதில் மேற்படி திருமதி.வாணிஸ்ரீ Camera Operator இருக்கைக்கு இடதுபுறம் இருந்த பழைய நோட்டு புக்கில் ரூ.600/- காணப்பட்டதை கைப்பற்றப்பட்டது. மேற்படி நபரின் இருக்கைக்கு வலது புறம் இருந்த டிரேயில் ரூ.880/- காணப்பட்டது. கைப்பற்றப்பட்டது. அதை பற்றி திருமதி.வாணிஸ்ரீ Camera Operator கேட்டதற்கு தனக்கு சொந்தமான பணம் இல்லை என்று விளக்கம் அளித்தார். சரியான விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் லஞ்சமாக பெறப்பட்ட பணம் என கருதி ரூ.1480/-மும் கைப்பற்றப்பட்டது.

மேலும், அலுவலகத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் ஆஜரில் இருந்தனர், அவர்களின் விவரம் வருமாறு.

| வ.எண். | ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம் | வைத்திருந்த இருப்புத்தொகை | பணத்திற்கான விளக்கம் | விவரம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.சரளா, வ/32, க/பெ.தியாகராஜன் (லேட்), எண்-9/526 நேரு தெரு, புக்கத்துறை, மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். 7867813413, 8056450043 | ரூ.80,000/- | தான் கிரையம் வாங்க உள்ள இடத்திற்காக இடத்தின் விற்பனையாளருக்கு கொடுப்பதற்காக வைத்துள்ளதாக கூறினார். | தான் புக்கத்துறை கிராமத்தை சார்ந்தவர் என்றும் தெரிவித்தார். மேற்படி நபர் வைத்திருந்த ஆவணத்தை பரிசீலனை செய்ததில் சென்னை எழும்பூரை சேர்ந்த திரு.உமா சங்கர் என்பவரிமிருந்து புல எண்.438/11 பரப்பு 0.100 சதுர மீட்டர் அல்லது 1076 சதுரடி கொண்ட காலி மனையை ரூ.4,30,400/- கிரைய தொகை முழுவதுமாக கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் ஆவணம் எழுதிய தேதி 06.06.2024, முன் பதிவு வரிசை எண்.9(D409) தற்காலிக எண்.TP/183522251/2024 நாள் 06.06.2024 ஆகும். மேலும், சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்கும்போது மேற்படி ஆவணத்தின் முன் ஆவணமாக ஆவண எண்.472/ 2017-ல் காலம் சென்ற பன்னீர் (எ) செல்வம் என்பவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் திருமதி.வசந்தா உள்ளிட்ட ஐவரால் கிரையம் எழுதி கொடுக்கப்பட்டது. மேற்படி ஆவணம் பரிசீலிக்கப்பட்டதில் புக்கத்துறை கிராமம் பட்டா எண்.172 முருகன் மகன் பன்னீர் என உள்ளது. வாரிசு சான்று செல்வம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. கிரையதாரரால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பட்டா மாற்றம் நாளது வரையில் செய்யப்படவில்லை. வருவாய் துறையிலிருந்து ஏ.செல்வன் என்பவரும், பன்னீர் என்பவரும் ஆகிய இருவரும் ஒருவரே என்ற சான்று அல்லது பட்டா மாற்றம் செய்து பெறப்பட்டபின் ஆவணம் பதிவிற்கு ஏற்க முடியும் என்று சொன்னார். மேலும் இவ்வாவணத்தை கிரையம் கொடுப்பவரான உமா சங்கர் என்பவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இல்லாத காரணத்தினாலும் மேலும் மேற்படி நபர் முன்னுக்கு பின் முரணான தகவல் கூறியதால் ரூ.80,000/- லஞ்சப் பணமாக கொடுக்க வந்த பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. |
| 2. | திரு. அருளொளி, வழக்கறிஞர், எண்.9, கச்சேரி தெரு, உத்திரமேரூர். 9751699677 | ரூ.50,000/- | தான் கையில் வைத்திருந்த ரொக்க பணத்தை வங்கியில் செலுத்தி ஆன்லைன் பேமெண்ட் செய்யப் போவதாக கூறினார். மேலும் மேற்படி பணத்தை ஏடிஎம் டெபாசிட் மெஷினில் செலுத்தி ஆன்லைன் பேமெண்ட் எடுக்க வைத்திருந்தேன் என்றும் எழுத்து பூர்வமாக கூறியுள்ளார். | தான் வழக்கறிஞர் தொழில் செய்து வருவதாகவும், மதுராந்தகத்தை சார்ந்த திரு.குணசேகரன் என்பவர் அவரது மனைவி ஜெயந்தி அவர்களுக்கு 14.06.2022 தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்து மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டு குணசேகரன் பெயரில் பட்டா இல்லாததால் மேற்படி சொத்தானது உரிமையின் மூல ஆவணமான உயிலானது பதிவு செய்யப்படாத உயில் என்பதால் பதிவு செய்யமுடியவில்லை என RFL/மதுராந்தகம் சார் பதிவாளர் 02/2022 நாள். 14.06.2022 தேதியன்று உத்தரவு பிறப்பித்ததாகவும், மேற்படி சார் பதிவாளர் உத்தரவினை எதிர்த்து திரு.குணசேகரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்.16383/2022 தாக்கல் செய்யப்பட்டு மனுவை அனுமதித்து பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் எழுத்து பூர்வமாக தெரிவித்தார். மேலும் வாய்மொழியாக மேற்படி நீதிமன்ற ஆணையை பரிசீலித்து ஆவணத்தை மாவட்ட பதிவாளரிடம் அறிவுரை பெற்று பதிவிற்கு ஏற்கலாம் என சார்பதிவாளர் அவர்கள் ஏற்கனவே திரு. அருளொளி என்பவரிடம் தெரிவித்தார் என்றும் கூறினார். மேலும் எழுத்து பூர்வமாக மேற்படி உத்தரவின்படி பத்திரத்தை கிரையம் செய்ய டோக்கன் போட்டு டோக்கன் எண்.9 (D509 TP/183540603/2024) பதிவு செய்ய சார் பதிவாளர் அவர்களின் டேபிளில் வைக்கப்பட்டதாக கூறினார். ஆவணத்தை பரிசீலனை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்ததில் செலுத்த வேண்டிய கட்டண தொகை ரூ.62,000/- ஆகும். இதில் ஏற்கனவே ரூ.29,000/- செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சம்மந்தப்பட்ட நபர் ஆன்லைனில் பணம் கட்டும்போதே எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று வந்துவிடும். மேலும் சம்மந்தப்பட்ட நபர் கையில் ரூ.50,000/- வங்கி சீலுடன் கட்டாக 100 எண்ணிக்கையில் ரூ.500 இருந்தது. மேலும். மேற்படி ஆவணத்தை பதிவு செய்யவில்லை. எனவே. அவருடைய விளக்கம் முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் லஞ்சப்ப பணமாக கொண்டுவந்ததாக கருதி ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. |
| 3. | திரு.சக்திவேல், சக்தி நகர், மேலவலவம்பேட்டை, மதுராந்தகம். 9443094246 | ரூ.2000/- | கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | தான் மேலவலவம்பேட்டை சக்தி நகர் மனை எண்.74,75,76 கிரையம் செய்ய வந்ததாகவும். கையில் இருந்த பணம் ரூ.2000/- வழிச்செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். உரிய விளக்கம் அளித்ததால் பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 4. | திருK.தியாகராஜன், எண்.24, 7வது மெயின் ரோடு, குரோம்பேட்டை, நியூ காலனி, சென்னை - 44, 9500028717 | ரூ.6000/- | கார் பெட்ரோல் போடுவதற்கு மற்றும் பிற செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட கிழாமூர் கிராமத்தில் 86/5 பி உள்ள நிலத்தை கிரையம் செய்ய வந்ததாக கூறினார். கையில் வைத்திருந்த பணம் ரூ.6000/- கார் பெட்ரோல் செலவிற்காகவும், பிற செலவிற்காகவும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்கப்பட்டு பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |
| 5. | திரு.ராமகிருஷ்ணன் பிரியா கண்டிரக்ஷன், எண். 60 1-வது அவென்யூ, இந்திரா நகர், அடையாறு சென்னை-20, 9841013338 | ரூ.7020/- | கை செலவு மற்றும் கார் பெட்ரோலுக்கு வைத்திருந்தாக கூறினார். | தங்கள் நிறுவனம் சார்பில் கொடிதண்டலம் கிராமத்தில் போட பட்டுள்ள லேஅவுட்ல் பிளாட் எண்.78ஐ தமிழரசன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுக்க சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். தன்னிடமிருந்த பணம் தனது கை செலவிற்கும், கார் பெட்ரோல் போடுவதற்கும் வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்கப்பட்டு பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |
| 6. | திரு.ரவிக்குமார், த/பெ வீரராகவ ஐயர், எண்.53 பெரும்பாக்கம் கிராமம், மதுராந்தகம் வட்டம். 7708317321 | ரூ.400/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் வில்லங்க சான்றிதழ் பெறுவதற்காக அப்ளை செய்திருந்தேன். அதைப்பற்றி விவரம் கேட்க சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். ரூ.400/- கை செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்ததால் பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | திரு.சுரேஷ். த/பெ கோதண்டராமன் எண்.6, எம்.எஸ் நகர், போரூர், சென்னை 116. 9884448661. | ரூ.200/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் கிரையம் வாங்கும் இடத்திற்கு கிரைய பத்திரம் டாக்குமெண்ட் எண்.3172/2024-ன்படி பதிவு செய்துள்ளதாகவும் கூறினார். அவர் வைத்திருந்த ரூ.200/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 8. | திரு.கேசவன் த/பெ ஜெகந்நாதன் எப்-1 ஜெபரி ஜோதி அப்பார்ட்மெண்ட், கலைஞர் மெயின் ரோடு, சென்னை-73. 8056042662 | ரூ.5000/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் சுரேஷ் என்பவர் வாங்கிய இடத்திற்கு சாட்சி கையெழுத்து போடுவதற்கு வந்ததாக தெரிவித்தார். சென்னையில் இருந்து வந்ததால் கை செலவிற்கு ரூ.5000/- வைத்திருந்ததாக கூறினார். அவர் உரிய விளக்கம் அளித்ததால் அவரது பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |
| 9. | திரு.ஸ்டீபன், த/பெ மாரி எண்.149 பூதூர், மதுராந்தகம். 9566853731 | ரூ.1000/ | கை செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். | தான் சுரேஷ் என்பவர் வாங்கிய இடத்திற்கு சாட்சி கையெழுத்து போடுவதற்கு வந்ததாக தெரிவித்தார். கை செலவிற்கு ரூ.1000/- வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்கப்பட்டு பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |
| 10. | திரு.நடராஜன். செம்பூண்டி மதுராந்தகம் வட்டம். 9443638569 | ரூ.8500/- | விவசாய நிலத்திற்கான பைப் வாங்க வைத்திருப்பதாக கூறினார். | தான் 29.04.2024-ம் தேதி கிரையம் வாங்கிய ஆவணம் எண்.98/2024-ன்படி பதிவாகியுள்ளது. அந்த ஆவணத்தை வாங்குவதற்காக வந்துள்ளதாகவும், தன்னிடம் உள்ள ரூ.8500/- விவசாய நிலத்திற்கான பைப் வாங்க வைத்திருப்பதாக விளக்கம் அளித்தார் அவருடைய விளக்கம் ஏற்க்பபட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 11. | திரு.பண்டரிபாய் எண்.23 1வது தெரு, சாமியார் தோட்டம் வியாசர்பாடி, சென்னை-39 9787476161 | ரூ.650/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஆவண எண்.3177/2024-ன்படி இடம் கிரைய பத்திரம் செய்தததாகவும் தன்னிடம் உள்ள ரூ.650/- கை செலவிற்காக வைத்துள்ளதாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்கப்பட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 12. | திரு.ஏழுமலை த/பெ முருகேசன் எண்.82 ரங்கசாமி தெரு மதுராந்தகம். | ரூ.150/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஆவண எண்.3176/2024-ன்படி இடம் கிரைய பத்திரம் செய்தததாகவும் தன்னிடம் உள்ள ரூ.150/- கை செலவிற்காக வைத்துள்ளதாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்க்பபட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 13. | திரு.சுந்தரபாபு எண்.57 லட்சுமி தெரு, உதனாய் நகர், சென்னை. 9444120129 | ரூ.17,100/- | கார் பெட்ரோல் மற்றும் மருத்துவ செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஆவண எண்.3176/2024-ன்படி திரு.ஏழுமலைக்கு கிரையம் செய்து கொடுக்க சார் பதிவாளர் வந்ததாக கூறினார். சென்னையில் இருந்து காரில் வந்ததால் பெட்ரோல் செலவு மற்றும் தான் வயது முதிர்ந்தோர் என்பதால் வழியில் ஏதேனும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மருத்துவ செலவிற்காக தான் வைத்திருந்த பணம் ரூ.17,100/- வைத்திருந்ததாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்க்பபட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 14. | திரு.செந்தில்குமார் த/பெ துரை எண்.5 பார்த்தசாரதி தெரு, மதுராந்தகம். 9994325008 | ரூ.2090/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஏபமலை என்பவர் பதிவு செய்த கிரைய பத்திரத்திற்கு ஆவணம் எண்.3176/2024 சாட்சி கையெழுத்து போடுவதற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.2090/- கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்க்பபட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 15. | திருமதி.கவிதா எண்.9 1வது தெரு, சாமியார் தோட்டம், வியாசர்பாடி, சென்னை-39. | ரூ.2000/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஆவண எண்.3177/2024-ன்படி இடம் கிரைய பத்திரம் செய்வதற்கு பண்டரிபாய் அவர்களுடன் வந்ததாகவும், தன்னிடம் உள்ள ரூ.2000/- கை செலவிற்காக வைத்துள்ளதாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்க்பபட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 16. | திரு.அனிஷ் த/பெ. நாராயணகுட்டி எண்.204 எம்.பி.எம் தெரு, வியாசர்பாடி, சென்னை-39 8438286113 | ரூ.7450/- | டீசல் செலவு மற்றும் வழி செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஆவண எண். 3179/2024-ன்படி கிரையம் செய்வதற்காகா சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும். தான் வைத்திருந்த பணம் ரூ.7450/- சென்னையில் இருந்து வந்ததால் வழி செலவிற்கும் கார் டீசல் போடுவதற்கும் வைத்திருந்ததாகவும் கூறினார். அவருடைய விளக்கம் ஏற்க்பபட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 17. | திரு.விஜய், த/பெ நாகரத்தினம் எண்.36/4 மண்டபம் தெரு மதுராந்தகம். 9444282555 | ரூ.1000/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் ஆவண எண்.3169/2024 கிரையம் செய்த ஆவணத்தை பெறுவதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்தேன். தான் வைத்திருந்த பணம் ரூ.1000/- கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்கப்பட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 18. | திரு.ஜெயகுமார் த/பெ நாகராஜ் வழக்கறிஞர் மதுராந்தகம் 9944083033. | ரூ.1770/- | கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | தான் வழக்கறி'ராக பணியாற்றி வருவதாகவும், இள'கோவன் என்பவருக்கு MOD ஆவணம் பதிவு செய்வதற்கு வந்ததாக கூறினார். தான் வைத்திருந்த பணம் ரூ.1770/- கை செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்கப்பட்டு அவருடைய பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |

மேலும், மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகம் முழுவதையும் சோதனை செய்ததில், சார் பதிவாளர் அறையின் பக்கத்தில் உள்ள ஆவண பதிவறையில் உள்ள ஜன்னல் கவரில் ரூ.20,000/- கண்டெடுக்கப்பட்டது. இப்பணத்திற்கு விளக்கமாக திரு.தயாளன் த/பெ குமார் என்பவர் தான் சோதனையின்போது அலுவலகத்தின் உள்ளே இருந்தார். அவரிடம் விசாரணை செய்யும்போது சிறுநல்லூர் கிராமம் ஜே.கே.கார்டன் மனைப்பிரிவு மதிப்பு நிர்ணயம் செய்ய திரு.திலீப் பிரசாத், சார் பதிவாளர் (பொறுப்பு) அவர்கள் ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என கூறினார். மேற்படி பணத்தை தங்கதுரை என்பவரிடம் கொடுக்கும்படி கூறினார். எனவே, நான் ரூ.20,000/- பணத்தை தங்கதுரை என்பவரிடம் கொடுத்தேன் என்று கூறினார். எனவே, மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின்போது உள்ளே இருந்த திரு.தங்கதுரை என்பவரை விசாரணை செய்ய தான் டீ. காபி கொடுக்க வந்ததாகவும் தயாளன் அவர்கள் ரூ.20000/- சார் பதிவாளர் அவர்களிடம் கொடுக்க சொன்னார். அதை நான் வாங்கி அலமாரியில் வைத்தேன் என தங்கதுரை வாக்குமூலம் அளித்தார்.

மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.திலீப்பிரசாத் அவரிடம் விவரம் கேட்க இவர் 04.08.2023 முதல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், சார்பதிவாளர் பொறுப்பாக 06.02.2024 முதல் பணிப்புரிந்து வருகிறேன் என்றும், சார்பதிவாளர் திரு.கணேசன் அவர்கள் மாற்று பணியாக (Deputation) திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும் சொன்னார். உதவியாளர் திரு.செ.கண்ணன் என்பவர் இன்று 06.06.2024 தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்திற்கு வழக்கிற்காக சென்றுள்ளார் என்றும், திரு.ச.ஜெயகுமார், இளநிலை உதவியாளர் என்பவர் இன்று அலுவலகத்திற்கு வாடகை கட்டிடம் இடம் பார்க்கும் பொருட்டு மதியம் 02.30 மணிக்கு மேல் சென்றார் எனவும், திரு.ஆ.ஆதிகேசவன், இளநிலை உதவியாளர் மாற்று பணியாக செங்கல்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார் என்றும் கூறினார்.

திருமதி.சரளா தனது மைனர் குமாரர் ரோகித் குமார் என்பவருக்கு கார்டியன் முறையில் திரு.உமா சங்கர் என்பவரிடமிருந்து கிரையம் பெறும் ஆவணம் பதிவிற்கு தாக்கலாகி உள்ளது. இதன் நாள் 06.06.2024 ஆகும். மேற்படி ஆவணத்தின் முன் ஆவணமாக ஆவண எண்.472/2017-ல் காலம் சென்ற பன்னீர் (எ) செல்வம் என்பவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் திருமதி.வசந்தா உள்ளிட்ட ஐவரால் கிரையம் எழுதி கொடுக்கப்பட்டது. மேற்படி ஆவணம் பரிசீலிக்கப்பட்டதில் புக்கத்துறை கிராமம் பட்டா

எண்.172 முருகன் மகன் பன்னீர் என உள்ளது. வாரிசு சான்று செல்வம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. கிரையதாரரால் பட்டா மாற்றம் நாளது வரையில் செய்யப்படவில்லை. வருவாய் துறையிடமிருந்து வி.செல்வம் என்பவரும், பன்னீர் என்பவரும் ஆகிய இருவரும் ஒருவரே என்ற சான்று அல்லது பட்டா மாற்றம் செய்து பெறப்பட்டபின் ஆவணம் பதிவிற்கு ஏற்கலாம் என்று கூறினார்.

2022-ல் பதிவு செய்யப்படாத உயிலின் அடிப்படையில் பட்டா மாற்றம் பெறப்படாத நிலையில் உயில் Beneficiary-ஆல் செட்டில்மெண்ட் ஆவணம் தனது மனைவிக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மேற்படி ஆவணத்தை பட்டா மாற்றம் செய்து தாக்கல் செய்யும் பொருட்டு அப்போதைய சார்பதிவாளரால் பதிவு மறுதலிக்கப்பட்டது. மேற்படி மறுதலித்ததின் மீது ஆவணதாரரால் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு பதிவு செய்யும்படி ஆணை பெறப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையை பரிசீலித்து ஆவணத்தை மாவட்ட பதிவாளரிடம் அறிவுரை பெற்று பதிவிற்கு ஏற்கலாம் என ஏற்கனவே திரு.அருளொளி அவர்களிடம் கூறினேன்.

திருமதி.யசோதா மற்றும் திரு.ஜெகதீஷன் என்பவரால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த ஐந்து மாதமாக வில்லங்க சான்றிதழ் சரிபார்த்து கொடுப்பதாகவும், சம்பளமாக மக்கள் யாராவது ஒருவர் ரூ.50, ரூ.20 கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தில் அரசால் நியமிக்கப்பட்ட பணியாளர்களே பணிப்புரிந்து வருகின்றனர். வெளி ஆட்கள் யாரும் இவ்வலுவலகத்தில் பணிபுரியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி.வாணிஸ்ரீ என்பவர் இவ்வலுவலகத்தில் Camera Operator ஆக பணிபுரிந்து வருகிறார். அவரிடமிருந்து ரூ.2480/- கைப்பற்றப்பட்டதற்கு விளக்கம் கேட்டதற்கு தனக்கு சொந்தமான பணம் இல்லை என்று விளக்கம் சொன்னார். சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்டபோது பதிவு பணியில் பொது மக்களுடன் open chamber-ல் உள்ள நிலையில் கணினி அறையில் கைப்பற்றப்பட்தற்கு எனக்கு விவரம் தெரியாது என கூறினார்.

திரு.தயாளன் என்பவர் ஜே.கே.கார்டன், சிறுநல்லூர் கிராமம் வீட்டு மனைபிரிவிற்கு மதிப்பு நிர்ணயம் செய்ய ரூ.20,000/- என்னிடம் கொடுப்பதற்காக திரு.தங்கதுரை என்பவரிடம் கொடுத்துவிட்டதாக தெரிவித்துள்ளார். ஜே.கே.கார்டன் மனைப்பிரிவு தொடர்புடைய கோப்பு மதிப்பு நிர்ணயம் பொருட்டு மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பே அனுப்பப்பட்டுள்ளது. மேலும், திரு.தயாளன் த/பெ குமார் என்பவர் ஜே.கே.கார்டன் என்ற மனைப்பிரிவிற்கு உரிமையாளரோ, கிரையதாரரோ அல்ல.

மேற்படி நபர் புரோக்கர் பணியில் உள்ள நபரால் பொய்யாக கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் என கூறினார்.

இன்று 06.06.2024-ந்தேதி காலையிலிருந்து ஆவணப்பதிவிற்காக 91 டோக்கன்கள் போடப்பட்ட நிலையில் 29 ஆவணங்கள் பதியப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட விவரத்தினை கணிணி நகல் எடுத்து சான்றாவணமாக 2 பக்கங்களாக கொடுத்தார். மேலும், வருகைப்பதிவேடு-ஜீன்/2024, தாமத வருகைப்பதிவேடு-ஜீன்/2024, ரொக்க பதிவேடு -ஜீன்/2024, தற்செயல் விடுப்பு பதிவேடு-ஜீன்/2024, தன் பதிவேடு -ஜீன்/2024 மற்றும் இயக்கப்பதிவேடு- -ஜீன்/2024 ஆகிய பதிவேடுகளை நகலெடுத்து உண்மை நகல் என சான்றளித்து கொடுத்தார். அதில் என் முன்பாக பெறப்பட்டது என நானும் கையொப்பம் செய்து மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். அசல் ஆவணம்-(2) 1)வ.எண்.9(D-409) 2) ஆவணம் எண்.472/2017 ஆகியவற்றையும் மேல் விசாரணைக்கு கைப்பற்றினேன்.

<u>கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு.</u>

| வ.எண். | பணம் கைப்பற்றப்பட்ட நபரின் பெயர் விலாசம் | தனிநபர்/புரோக்கர்/ அலுவலர் | கைப்பற்றபட்ட தொகையின் விவரம் |
|---|---|---|---|
| 1. | திருமதி.சரளா, வ/32, க/பெ.தியாகராஜன் (லேட்), எண்-9/526 நேரு தெரு, புக்கத்துறை, மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். 7867813413, 8056450043 | தனி நபர் | ரூ.80,000/- |
| 2. | திரு.அருளொளி, வழக்கறிஞர், எண்.9, கச்சேரி தெரு, உத்திரமேரூர். 9751699677 | தனி நபர் | ரூ.50,000/- |
| 3. | திருமதி.வாணிஸ்ரீ வ/45 க/பெ.அமரேசன், Camera Operator (Zigma) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | Camera Operator (Zigma) | ரூ.2480/- |
| 4. | திருமதி.யசோதா வ/34 க/பெ.லட்சுமணன், தனி நபர் (Private Individual) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் | தனி நபர் (Private Individual) | ரூ.1500/- |
| 5. | சார் பதிவாளர் அறையின் பக்கத்தில் உள்ள ஆவண பதிவறையில் உள்ள ஜன்னல் சுவரில் | - | ரூ.20,000/- |
| | மொத்தம் | | ரூ.1,53,980/- |

மேற்குறிப்பிட்ட தொகை ரூ.1,53,980/- (ரூ.500 x 303 நோட்டுகள், ரூ. 200 x 4 டுகள், ரூ. 100 x 16 நோட்டுகள் ரூ. 50 x 1 நோட்டுகள், ரூ. 20 x 1 நோட்டுகள், 0 x 1 நோட்டுகள்) ஆகியவற்றிற்கு சரியான முகாந்திரம் கூறாததால், அனைத்தும் சார்பதிவாளர் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணம் என கருதி கைப்பற்றப்பட்டது.

மேலும், இக்கூட்டாய்வின்போது ஆஜரில் இருந்த உதவியாளர் சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.திலீப்பிரசாத், மற்றும் 3 நபர்கள் அவர்களது விளக்கங்களை அவர்கள் என் முன்னே கைப்பட எழுதி கொடுத்துள்ளார்கள். மேலும், மேலே சொன்ன தனி நபர்களும் கைப்பட விளக்கம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். தனி நபர்களின் விசாரணை முடித்து. மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 06.06.2024 தேதி மாலை 04.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 01.30 மணிக்கு (07.06.2024) முடிக்கப்பட்டது.

1). ஓம். திரு.M.M.T.திலீப் பிரசாத், வ-41, த/பெ. M.தன்ராஜ், உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), சார் பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

2) ஓம். திரு.B. சதீஷ், வ/30, த/பெ.பாபு, Data Entry Operator (TCS), சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

3) ஓம். திருமதி.வாணிஸ்ரீ வ/45 க/பெ.அமரேசன், Camera Operator (Zigma) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

4) ஓம். திரு. V.சிவகுமார், வ/42 த/பெ.விஜயன், Data Entry Operator (TCS) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

5) ஓம். திருமதி.யசோதா வ/34 க/பெ.லட்சுமணன், தனி நபர் (Private Individual) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

6) ஓம். திரு.R.ஜெகதீஷன், வயது-37, த/பெ.ராகவன், தனி நபர் (Private Individual) சார்பதிவாளர் அலுவலகம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

7) ஓம். திரு. V.கதிர்வேல், சிறப்பு உதவி ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, செங்கல்பட்டு மாவட்டம்

8) ஓம்.திரு. S.பண்டாரசுவாமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, செங்கல்பட்டு மாவட்டம்

9) ஓம். திரு.S.சரவணன், காவல்துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, செங்கல்பட்டு மாவட்டம்

10). ஓம். திரு.அ.சையத்அலி, துணை வட்டாட்சியர் (தேர்தல்), திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு மாவட்டம்.

ஐயா,

மேலே கண்ட புகாரினைப் பெற்று செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.2/AC/2024/CP பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 7, 7A PC Act Amendment 2018 ஆக இன்று 07.06.2024 / 03.30 மணிக்கு வழக்கு பதிந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் செயல்முறை ஆணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் Form-91 ஆகியவற்றை கனம் மாண்புமிகு தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி, செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கும் ஏனைய நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது. ஓம். (S. சரவணன்) 07.06.2024 DSP V&AC, Chengalpattu.

07/06/24
(S. சரவணன்)
Deputy Superintendent of Police
Vigilance and Anti - Corruption
Chengalpattu - 603 001.